TASMAC

வ.எண் :

# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்.,

மாவட்ட மேலாளர் அலுவலகம்
திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

**மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் முகவரி | மாவட்ட மேலாளர்,<br>**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்,**<br>திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டம் |
| 2. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் முகவரி சம்பந்தமாக விபரம் | திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டத்திலுள்ள டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் அன்றாடம் சேகரிக்கக் கூடிய காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் மதுக்கூடத்தில் தின்பண்ட விற்பனை அனுமதி. |
| 3. | எந்த இடத்தில் எந்த தேதி வரை என்ன விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக விண்ணப்ப படிவம் கிடைக்கும் என்ற விபரம் | விண்ணப்பத்தின் விலை ரூ. 525/- (ரூபாய் ஐநூற்று இருபத்து ஐந்து மட்டும்) (வங்கி வரைவோலையாகவோ (அ) பணமாகவோ) **மாவட்ட மேலாளர் திருவள்ளூர் (கிழக்கு) டாஸ்மாக்** என்ற பெயரில்) (சென்னையில் காசாக்கக்கூடியது)<br>விண்ணப்பம் கிடைக்கக்கூடிய இடம் :<br>**மாவட்ட மேலாளர் அலுவலகம்**<br>திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டம் (இருப்பு)<br>1, பெங்களூர் சாலை, செம்பரம்பாக்கம்,<br>திருவள்ளூர் – 602 103.<br>விண்ணப்பம் கிடைக்கக்கூடிய நாட்கள்<br>**06-11-2017 முதல் 23-11-2017 வரை**<br>**(மாலை 5.00 மணி வரை சனிக்கிழமை உட்பட)**<br>விடுமுறை தினங்களைத் தவிர விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். |
| 4. | செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை **(E.M.D.)** மேற்கண்ட தொகையை மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திருவள்ளூர் கிழக்கு என்ற பெயரில் கேட்புக் காசோலையாக எடுக்க வேண்டும். | சென்னை பெருநகராட்சி – ரூ. 25,000/-<br>நகராட்சிப் பகுதி – ரூ. 20,000/-<br>இதர பகுதிகள் – ரூ. 5,000/- |
| 5. | நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விண்ணப்பதாரர் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளும், நேரமும், மற்றும் இடமும் | **24-11-2017 காலை 10.30 மணி வரை**<br>(விடுமுறை தினங்களைத் தவிர விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்)<br>**மாவட்ட மேலாளர் அலுவலகம்**<br>திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டம் (இருப்பு)<br>1, பெங்களூர் சாலை, செம்பரம்பாக்கம்,<br>திருவள்ளூர் – 602 103. |
| 6. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும் மற்றும் நேரமும் | இடம் : **மாவட்ட மேலாளர் அலுவலகம்**<br>திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டம் (இருப்பு)<br>1, பெங்களூர் சாலை, செம்பரம்பாக்கம்,<br>திருவள்ளூர் – 602 103.<br>நாள் : **24-11-2017 நண்பகல் 12.00 மணி** |

| | | |
|---|---|---|
| 7. | ஒப்பந்த காலம் | உரிம காலங்கள் ஒரு வருடம் 1–12–2017 முதல் 30–11–2018 (தற்காலிகமானது, மாறுதலுக்கு உட்பட்டது) |
| 8. | ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியத் தகவல் | பிணை வைப்புத் தொகையுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிக்கப்படுவது தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாவட்ட மேலாளரின் முழு அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். |
| 9. | கடை எண் மற்றும் முகவரி | |
| 10. | குறைந்த பட்ச ஒப்பந்த தொகை (சதவீதம்) பிரதி மாதம் விற்பனைத் தொகையில் | 3.00% மேல் (சதவீதம்) |
| 11. | நிபந்தனைகள் | இத்துடன் இணைக்கப்படவேண்டியது :<br>1) அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்ட நிபந்தனை படிவம் விண்ணப்ப படிவத்துடன் அளிக்கப்பட வேண்டும்.<br>2) விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி அடங்கிய முத்திரையிடப்பட்ட கவரில் விண்ணப்பிக்கும் கடை எண் மற்றும் முகவரி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.<br>3) குறைந்த பட்ச ஒப்பந்த சதவீதத்தை விட குறைவான ஒப்பந்த சதவீதம் கோரிய விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.<br>4) சமீப கால பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் 3 இணைக்க வேண்டும்.<br>5) விண்ணப்பதாரர் இருப்பிட சான்று அல்லது குடும்ப அட்டை நகல் மற்றும் நிரந்தர கணக்கு அட்டை (PAN CARD ) ஆகியவற்றின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.<br>6) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 3 தினங்களுக்குள் கட்டிட வாடகை ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.<br>7) தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017/தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017ன் கீழ் பதிவு செய்து GSTIN வரி செலுத்த சான்று பெற்றவராக இருக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யும்போது GSTIN சான்றிதழ் சமர்பிக்க வேண்டும். மேலும் தாங்கள் பிரதிமாதம் செலுத்தும் 99% கேட்புத்தொகைக்கு 18% GST தனிவங்கி வரைவோலையாக அரசு கணக்கில் செலுத்தி இரசீதின் நகலை சமர்பிக்க வேண்டும்<br>8) தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு அலுவலரின் (FSSAI) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |

மாவட்ட மேலாளர்

**திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டம்**

## மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதி ஒப்பந்தப்புள்ளி தெரிவிக்கும் விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரது பெயர் மற்றும் முகவரி,<br>கைப்பேசி மற்றும் தொலைபேசி எண். | |
| 2. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள்<br>சம்பந்தமாக விபரம் | டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் அன்றாடம் சேகரிக்கக் கூடிய காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் மதுக் கூடத்தில் தின்பண்ட விற்பனை அனுமதி. |
| 3. | பணி மேற்கொள்ளப்பட வேண்டிய<br>மாவட்டத்தின் பெயர் | திருவள்ளூர் (கிழக்கு) மாவட்டம். |
| 4. | மேற்படி மாவட்டத்தில் பணி மேற்கொள்ளப்பட<br>தெரிவிக்கும் கடையின் விபரங்கள் | |
| | கடை எண். | |
| | முகவரி | |
| 5. | விண்ணப்பதாரர் வருமான வரி செலுத்துபவரா?<br>ஆம் எனில் வருமான வரி செலுத்தும் **(PAN)** எண். | |
| | விண்ணப்பதாரர் சேவை வரி செலுத்துவது **(Service Tax Registration Certificate)** சம்மந்தமான விவரங்கள் | |
| 6. | செலுத்தப்பட்ட பிணை வைப்புத் தொகை **(E.M.D.)** விபரங்கள் :<br>1. தொகை<br>2. வரைவோலை எண் மற்றும் நாள்<br>3. தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் பெயர்<br>4. கிளை | |

## மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விபரம்

| கடை எண் மற்றும் முகவரி | பிரதி மாதம் ஒன்றுக்கு – மதுக்கூடங்களில் அன்றாடம் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் எடுத்துக்கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் சதவீதம் **(குறைந்த பட்ச ஒப்பந்தம் கோரும் சதவீதம் 3க்கு மேல் இரண்டு தசம எண்களில் கோர வேண்டும்)** |
|---|---|
| | ........... சதவீதம் |

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் மேலும் இத்துடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் முழுமையாக என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை என்றும் உறுதி கூறுகிறேன். மேற்கூறிய தொகைக்கு அரசு நடைமுறையில் உள்ள விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் முதலியவற்றை தவறாது செலுத்த சம்மதிக்கிறேன்.

**விண்ணப்பதாரர் கையொப்பம்**

# தமிழ்நாடு மாநில வாணிப கழகம் லிட்.,

## மதுக்கூட ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. *நிர்ணயிக்கப்படும் சதவிகிதம் குறைந்தபட்ச சதவிகிதமாக கொண்டு டெண்டர் முறையில் கடைவாரியாக அதிகபட்ச சதவிகிதம் கோருபவருக்கு மாவட்ட மேலாளரால் மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில்களை அவ்வப்போது சேகரித்தல் மற்றும் அப்புறப்படுத்தல் உரிமம் அளிக்கப்படும்.*

2. *<u>உரிமத்தொகை</u>*

(i) *கடையின் முந்தைய மாத (அக்டோபர் 2017) விற்பனைத் தொகையினை பெருக்கி அவ்வாறு கிடைக்கும் தொகையே அம்மதுக்கூடத்தின் ஒரு மாத அனுமதி கேட்புத்தொகை ஆகும்.*

(ii) *தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள்*

● *மேற்கண்ட முன் அனுமதி கேட்புத்தொகையைப் போல் இரண்டு மடங்கு தொகையை காப்புத் தொகையாக* (Security Deposit) *டாஸ்மாக் நிறுவனத்திற்கு தனி கேட்பு காசோலையாக* (Demand Draft) (District Manager, TASMAC Thiruvallur East District *என்ற பெயரில்) செலுத்த வேண்டும்.*

● *ஒரு மாத முன் அனுமதி கேட்புத் தொகையில்,* 99%-*க்கான தொகை தனி கேட்புக் காசோலையாக* (Demand Draft) SBI, ADB Branch, Thiruvallur *என்ற பெயரில் அரசுக் கணக்கில் செலுத்துவதற்காக மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அளிக்க வேண்டும்.*

● *ஒரு மாத முன் அனுமதி கேட்புத் தொகையில்* 1%-*க்கான தொகை தனி கேட்புக் காசோலையாக டாஸ்மாக் நிறுவனத்தின்* (District Manager, TASMAC Thiruvallur East District *என்ற பெயரில்) பெயரில் வழங்க வேண்டும்.*

● *குறிப்பிட்ட கடையின் உண்மையான முந்தைய மாத விற்பனையின் அடிப்படையில் கணக்கிடப்படும் கேட்புத் தொகை, ஏற்கனவே செலுத்திய கேட்புத் தொகையை விட அதிகமாக இருப்பின் அந்தக் கூடுதல் தொகையை அடுத்த மாதம் 5-ம் தேதிக்குள், 99%-க்கான தொகை* SBI, ADB Branch, Thiruvallur *என தனி கேட்புக் காசோலையாகவும்* (Demand Draft) 1%-*க்கான தொகை தனி கேட்புக் காசோலையாகவும்* (Demand Draft) *மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வழங்க வேண்டும்.*

● *குறிப்பிட்ட கடையின் முந்தைய மாத உண்மையான விற்பனையின் அடிப்படையில் வரும் மாத கேட்புத் தொகை, ஏற்கனவே செலுத்திய முன் அனுமதி கேட்புத் தொகையை விடக் குறைவாக இருப்பின், அந்த குறைவுத் தொகையை அடுத்த மாதம் 5-ம் தேதிக்குள் செலுத்த வேண்டிய முன் அனுமதி கேட்புத் தொகையிலிருந்து கழித்த பின்பு வரும் நிகரத் தொகையில்,* 99%-*க்கான தொகை தனி கேட்புக் காசோலையாகவும்* 1%-*க்கான தொகை தனி கேட்புக் காசோலையாகவும்* (Demand Draft) *செலுத்த வேண்டும்.*

● *ஒரு குறிப்பிட்ட மாதத்தின் முன் அனுமதி கேட்புத் தொகை கணக்கீடு செய்து செலுத்துவதற்கு அக்குறிப்பிட்ட மதுபானக் கடையின் முந்தைய மாத உண்மையான விற்பனைத் தொகையை அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இது ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும்.*

3. *<u>காப்புத்தொகை</u>*

● *மதுக்கூட ஒப்பந்ததாரர்கள் செலுத்திய காப்புத் தொகை போதுமானதாக உள்ளதா என மூன்று மாதத்திற்குப் பின் ஆய்வு செய்யப்படும் (அதாவது செப்டம்பர் 2017-ம் மாதத்தில்)*

● *மதுக்கூட ஒப்பந்ததாரர் செலுத்திய காப்புத் தொகை மூன்று மாத (ஜூன் 2017, ஜூலை 2017 மற்றும் ஆகஸ்டு 2017) உண்மையான விற்பனைத் தொகையின் அடிப்படையில் கணக்கிடப்படும் சராசரி மாத கேட்புத் தொகையைப்போல் 200%க்கும் குறைவாக இருப்பின்* (less than 200% of the average monthly demand)

**விண்ணப்பதாரர் கையொப்பம்.**

மேற்கண்ட கேட்புத் தொகையின் இரு மடங்கு தொகை, ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட இரண்டு மாத காப்புத்தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அந்தக் கூடுதல் தொகையை 2017 ஜனவரி மாதம் 10-ம் தேதிக்குள் கணக்கிட்டு தனிக் கேட்புக் காசோலையாக (Demand Draft) மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

(a) இரண்டு மாத உரிமைத் தொகையை காப்புத் தொகையாக ஒப்பந்ததாரர் வங்கி வரைவோலை மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்தவேண்டும். இது தவிர ஒவ்வொரு மாதத்திற்கான தொகையை மாத ஆரம்பத்தில் உரிமத்தை மாதந்தோறும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். காப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை (குறிப்பிட்ட காரணங்களுக்காக பறிமுதல் செய்யப்பட்டால் தவிர) ஒரு வருடம் கழித்து திருப்பித் தரப்படும். காப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.

(b) செலுத்தப்படும் இரண்டு மாத காப்புத் தொகையானது ஒரே வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும். அதைத்தவிர ஒரு மாதத்திற்கான முன் அனுமதி தொகையை அரசு கணக்கில் செலுத்திட ஒரு வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) 99% தொன்னூற்று ஒன்பது சதவீதத்திற்கும் மற்றொரு வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) 1% ஒரு சதவிகிதம் டாஸ்மாக் நிறுவனத்திற்கும் செலுத்திட வேண்டும். ஆக, மொத்தம் புது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்படும் வங்கி வரைவோலை எண்ணிக்கை மூன்று மட்டுமே இருத்தல் வேண்டும். அதை போலவே இரண்டாவது மாதம் முதல், மாதாமாதம் வழங்க வேண்டிய இரண்டு வங்கி வரைவோலை மட்டுமே இருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்ததாரர் அளிக்கும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையற்றதாக இருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பம் மற்றும் மதுக்கூடங்களில் நுகர்வோர் அன்றாடம் விட்டுச் செல்லும் காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை உரிமம் போன்ற ஆவணங்கள் அனைத்திலும் ஒப்பந்ததாரரின் கையொப்பமிட்ட மார்பளவு புகைப்படம் அளிக்கப்பட வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பதற்குமுன் ஒப்பந்ததாரர் மதுக்கடையில் சுற்றுப்புறத்தை பார்வையிடலாம். (a) ஒப்பந்தபுள்ளி கொடுத்தபின் அதை மாற்றவோ திரும்ப பெறவோ முடியாது.

7. 15 நாட்கள் முன்அறிவிப்பு கொடுத்து இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு.

8. அதிகபட்ச கேட்புத்தொகை குறிப்பிட்டவருக்கே மாவட்ட மேலாளரால், மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில் சேகரித்துக் கொள்ளும் உரிமம் அளிக்கப்படும்.

9. (a) மதுக்கூடத்தின் அனுமதிக்கட்டணம் (குறுமத்தொகை, பிரதிமாதம் 5ம் தேதிக்குள் செலுத்தி விட வேண்டும். மதுக்கூடங்களில் ஒப்பந்ததாரர் தான் நுகர்வோருக்கு அளிக்கும் வசதிகளுக்காக (உதாரணமாக குளிர்சாதன வசதி) தனியே சேவைக்கட்டணம் வசூலிக்க விரும்பினால் அதற்கென டாஸ்மாக் நிறுவனத்தின் முன் அனுமதி பெறவேண்டும். அப்படிப்பட்ட இனங்களில் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் கூடுதல் சிறப்புக் கட்டணத்தை ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும்.

   (b) மேற்படி நுகர்வோரிடமும் வசூலிக்கும் சேவைக்கட்டணத்திற்கான உரிய ரசீதுகள் ஒப்பந்ததாரரால் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அது குறித்த கணக்கு விபரங்களையும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும். மேற்படி சேவைக்கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள் ஏதுமிருப்பின் அவற்றையும் ஒப்பந்ததாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. ஒப்பந்ததாரர் வருமான வரி செலுத்துபவராயின், டாஸ்மாக் நிறுவனத்தின் மதுக்கூட உரிமம் பெற்று செயல்பட்ட காலத்திற்கு தொடர்புடைய தனது வருமான வரி விபரங்களை வருமான வரித்துறைக்கு சமர்ப்பித்திருந்தால் அதன் விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும்.

11. மேற்படி உரிம நகல் மதுக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

12. முன்னாள் தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவருக்கு அவரது கடந்த கால செயல்பாடுகளை கருத்தில் கொண்டு உரிமம் வழங்க முடிவு செய்யப்படும்.

13. நிர்வாக காரணங்களை ஒட்டி மதுக்கடையை மூட வேண்டியிருந்தாலோ அல்லது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தாலோ ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு புதிய ஒப்பந்தப்புள்ளி பெறப்படும்.

**விண்ணப்பதாரர் கையொப்பம்.**

14. அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படின் இந்த ஒப்பந்தம் தானாகவே முடிவுறும். அவ்வாறு முடிப்பதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு காரணம் தெரிவிக்க வேண்டியதில்லை. முன் அறிவிப்பும் கொடுக்க வேண்டியதில்லை. அரசு கொள்கையால் டாஸ்மாக் (தமிழ்நாடு மாநில வாணிப கழகம்) மதுக்கடையோ/மதுக்கூடமோ மூடப்பட்டால், அதற்கு ஒப்பந்ததாரர் எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

15. ஒப்பந்ததாரர் மதுக்கூடத்தில் நியமிக்கும் தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் பொறுப்பல்ல. ஒப்பந்ததாரர் நியமிக்கும் தொழிலாளர்களுக்கும், டாஸ்மாக் நிறுவனத்திற்கும் இடையில் தொழிலாளி முதலாளி உறவு கிடையாது.

16. மாதந்திர கேட்புக்தொகை பிரதிமாத விற்பனை தொகையில் ஒப்பந்ததாரர் கோரிய சதவீதத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும். ஒப்பந்தம் கோரிய சதவீதம் ஒப்பந்தகாலம் முழுமைக்கும் ஒரே சதவீதமாக இருக்கும்.

17. ஒப்பந்ததாரர் குடிதண்ணீர், அனுமதிக்கப்பட்ட குளிர்பானங்கள், சுண்டல் அவித்த மற்றும் வறுத்த பயறு வகைகள், முட்டை, மீன் மற்றும் இறைச்சி பண்டங்கள் ஆகியவற்றை நியாயமான விலைக்கு மட்டுமே விற்க அனுமதியுண்டு. வெளியில் சமைத்த தின்பண்டங்களை மட்டுமே விற்க அனுமதிக்கப்படும். (மதுக்கூடத்திற்குள் சமைத்திட அனுமதி இல்லை)

18. அடுப்பு வைத்து சமைத்தல் கூடாது. மதுக்கூடத்தில் அடுப்பு இருக்கக்கூடாது.

19. மின்கட்டணம், தண்ணீர் வசதி மற்றும் இடவசதி போன்ற அனைத்து செலவுகளையும் ஒப்பந்ததாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

20. எக்காரணம் கொண்டும் பிராணிகளையோ, பறவைகளையோ உயிருடன் மதுகூடத்திற்கு எடுத்து வருவதோ, இருப்பு வைப்பதோ அனுமதிக்கப்பட மாட்டாது.

21. அதேபோன்று மேற்படி விலங்குகளை / பறவைகளை மதுக்கூடத்தில் வைத்து கொல்வதோ அல்லது சமைப்பதோ அனுமதிக்கப்பட மாட்டாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

22. மேற்படி உரிமம் மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பதற்கும், காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ள மட்டுமே. மற்றபடி மதுக்கூடம் டாஸ்மாக் நிறுவனத்தின் முழு கட்டுப்பாட்டில் இருக்கும். டாஸ்மாக் நிறுவனம் நியமிக்கும் பணியாளர் இந்த மதுக்கூட அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிப்பார். மதுக்கூட சாவியும் டாஸ்மாக்கிடமே இருக்க வேண்டும்.

    (a) ஒப்பந்தப்புள்ளி கொடுத்தபின் அதை மாற்றினாலோ அல்லது திரும்பப் பெற்றாலோ, காப்புத்தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

23. வாடிக்கையாளர் எந்தவித வற்புறுத்தலுமின்றி மேற்படி மதுக்கூடத்தில் தானே விட்டுச்செல்லும் காலி பாட்டிலை மட்டுமே மேற்படி ஒப்பந்ததாரர் சேகரிக்க வேண்டும். வாடிக்கையாளர் மது பாட்டிலை எடுத்துச்சென்றால் எக்காரணம் கொண்டும் காலி பாட்டில்களை திருப்பி தரும்படி வற்புறுத்தக்கூடாது.

24. காலி பாட்டில்களை உடனுக்குடன் சேகரித்து அப்புறப்படுத்தி விட வேண்டும். எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் மதுக்கூடத்தில் காலி பாட்டில் சேகரித்து வைக்கக்கூடாது. தவறும் பட்சத்தில் காலி பாட்டில்களை டாஸ்மாக் மதுக்கூடங்களில் இருப்பு வைக்கும் நேரத்திற்காக மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூலிக்க டாஸ்மாக் நிறுவனத்திற்கு உரிமையுண்டு. ஒப்பந்ததாரர் காலி பாட்டில்களை குறைந்த பட்சம் வாரத்திற்கு ஒரு முறையாவது அப்புறப்படுத்திட வேண்டும்.

25. மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில், தின்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரம் செய்துக் கொள்ளும் உரிமம் பெற்றவர்கள் ஏனைய மதுக்கூடங்களில் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள் யாருக்கு விற்பனை செய்கிறார்கள், ஒவ்வொரு முறையும் எவ்வளவு காலி பாட்டில்கள் யாருக்கு விற்பனை செய்கிறார்கள், காலி பாட்டில்கள் வாங்கியவர்கள் எங்கே எடுத்து செல்கிறார்கள் போன்ற விவரங்களை தனியாக ஒரு பதிவேட்டில் குறித்து வைத்திருக்க வேண்டும்.

26. சேகரிக்கும் காலி பாட்டில்கள் யாருக்கு ஒப்பந்ததாரர் விற்கிறார் என்பதற்கான விவரங்களை முகவரியுடன் கூடிய முழு விபரங்களும் அவ்வப்போது மாவட்ட மேலாளருக்கு அளிக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர் கையொப்பம்.**

27. காலி பாட்டில் சேகரிப்பதற்கும் தின்பண்ட விற்பனைக்கும் தேவையான உரிய ஏற்பாடுகளையும், பணியாளர்களையும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பேற்றுச் செய்து கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் பணியாளர்களை இதில் ஈடுபடுத்தக்கூடாது. இவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்கள் மதுபாட்டில்களை கையாளக்கூடாது. காலி பாட்டில்கள் சேகரிப்பு மற்றும் தின்பண்டங்கள் விற்பது மட்டுமே அவரது பணியாக இருத்தல் வேண்டும். இப்பணியில் ஈடுபடுத்தப்படுபவர்கள் குழந்தை ஊழியர்களாக இருத்தல் கூடாது. 21 வயது முதிர்வடைந்த ஆண்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

28. மதுக்கூடங்களில் ஆபாச படமோ, எழுத்தோ, காட்சிகளோ இருக்கக்கூடாது. மதுக்கூடங்களில் வெளி நிறுவனங்களின் பெயர் பலகைகளோ, விளம்பரங்களோ இருத்தல் கூடாது.

29. (a) மதுக்கூடத்தினை பொழுதுபோக்கு இடமாகவோ, சூதாடும் இடமாகவோ, ஒப்பந்ததாரர் பயன்படுத்தக்கூடாது.

(b) மதுக்கூடத்தில் சூதாடுதல், பொழுதுபோக்கு கேளிக்கைகள் நடவா வண்ணம் பார்ப்பது ஒப்பந்ததாரர் கடமை.

30. (a) மதுக்கூடத்தில் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாடிக்கையாளரால் விட்டுச்செல்லப்படும் உணவு கழிவுகள், காலி டம்ளர்கள் போன்ற இனங்கள் ஒப்பந்ததாரரின் பணியாளரால் உடனுக்குடன் நீக்கப்பட்டு மதுக்கூடம் சுத்தம் செய்யப்படுவதும், குப்பைகளை அகற்றுவதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

(b) மதுக்கூடத்தில் எந்தவிதமான அசுத்தம் இல்லாமல், அவ்வப்போது அப்புறப்படுத்திட வேண்டும்.

31. மதுக்கூடத்தில் போதிய மின்விளக்குகள் பொருத்தி தேவையான வெளிச்சம் இருக்கும் வகையில் மதுக்கூடம் அமைத்திட வேண்டும்.

32. மதுக்கூடத்தில் கழிப்பிட வசதி கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.

33. மதுக்கூடத்தில் துப்புறவு பணியாளர்களை நியமித்து, கழிப்பிடம் தூய்மையாக பராமரித்திட வேண்டும்.

34. டாஸ்மாக் கடைகளின் வேலை நேரத்தை ஒட்டியே மதுக்கூடங்களின் வேலை நேரம் நண்பகல் 12.00 மணி முதல் இரவு 10.00 வரை ஆகும். அந்த வேலை நேரத்தின்போது மட்டுமே ஒப்பந்ததாரருக்கும், அவரது பணியாளருக்கும் மதுக்கூடத்தில் அனுமதியளிக்கப்படும்.

35. தின்பண்ட உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் தான் விற்பனை செய்யும் தின்பண்டங்களுக்கான உரிய முறையில் விலைப்பட்டியலை பார்வைக்கு வைப்பதுடன் தின்பண்டங்கள் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டதாகவும், சுத்தமாக பராமரிக்கப்பட்டதாகவும் அது தொடர்பான அரசின் அத்தனை சட்ட திட்டங்களுக்கு உட்பட்டனவாகவும் இருத்தல் அவசியம், இந்த தின்பண்ட பொருள்கள் தரக்கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

36. தின்பண்டவிற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரிப்பு தொடர்பான கணக்கு வழக்குகளை டாஸ்மாக் நிர்வாகம் கோரினால் அந்த விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உடன் அளிப்பது உரிமதாரரின் கடமையாகும்.

37. மதுக்கூடத்தில் அரசால் தடைசெய்யப்பட்ட எந்த பொருளும் விற்கக்கூடாது. மேலும் பீடி, சிகரெட் போன்றவை விற்க கூடாது.

38. குளிர்பானங்கள், குடிநீர் ஆகியவற்றில் ISI தரச்சான்று பெற்றவையே பயன்படுத்த வேண்டும்.

39. மதுக்கூடத்தில் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களை வைக்கக்கூடாது. மதுக்கூடத்தில் கீற்றுக்கொட்டகை கண்டிப்பாக இருக்ககூடாது. அவ்வாறு இருப்பின் உரிமம் இரத்து செய்யப்படும்.

40. அரசு அல்லது டாஸ்மாக் நிறுவனம் அவ்வப்போது விதிக்கும் இதர கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள், விதிகள் போன்றவற்றிற்கு முழுதும் ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

41. அரசின் பிற துறைகள் இது தொடர்பாக ஏற்கனவே விதித்துள்ள (அல்லது) விதிக்கும் அனைத்து சட்ட திட்டங்களுக்கும் ஒப்பந்ததாரரை கட்டுப்படுத்தும்.

**விண்ணப்பதாரர் கையொப்பம்.**

42. அதே போல் ஆய்வுக்கு வரும் டாஸ்மாக் அலுவலர்களுக்கு அவர்களது ஆய்வின் போது போதிய ஒத்துழைப்பினை ஒப்பந்ததாரர் அளிக்க வேண்டும். டாஸ்மாக் நியமிக்கும் பல்வேறு ஆய்வுக்குழுக்கள் எந்நேரமும் மதுக்கூடங்களை ஆய்வு செய்திட முழு உரிமை உண்டு.

43. தின்பண்ட விற்பனை தவிர மதுக்கூடத்திற்குள் தனியே மதுபானம் விற்பதோ, இருப்பு வைப்பதோ கூடாது.

44. தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரிப்பு உரிமம் பெற்றவர் மத்திய/மாநில அரசுகளால் அவ்வப்பொழுது அமுல்படுத்தப்படும் மத்திய/மாநில வரிகளை, உதாரணமாக விற்பனை வரி, சேவை வரி, வருமான வரி (TDS, TCS, etc.,) சுங்கவரி மற்றும் பிற வரிகள் அல்லது கட்டணங்கள், உரிமக்கட்டணத்திற்கு மேலாக செலுத்த வேண்டும். மேலும், அரசுத்துறை நிதிநிறுவனங்கள் / ஆணையங்களோடு சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமாயின் அதற்கும் கட்டுப்பட வேண்டும். இவைகளைத் தவிர, பணியாளர் சேமநலநிதி ஆணையம் (EPF Act) மற்றும் பணியாளர் காப்பீட்டுக் கழகத்தால் (ESIC) ஆணைகள் ஏதாவது பிறப்பிக்கப்பட்டால், அதற்கும் கட்டுப்படவேண்டும்.

45. ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலோ, முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ உரிய விசாரணைக்கு பின்னர் உரிமம் ரத்து செய்யப்படுவது மட்டுமன்றி முன் வைப்புத்தொகையை டாஸ்மாக் நிறுவனமே தக்க வைத்துக்கொள்ளவும், டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமையும் உண்டு.

46. உரிமம் காலம் ஓராண்டு காலமாகும். இது முற்றிலும் ஒரு தற்காலிகமான அனுமதி மட்டுமே. ஒவ்வொரு மாதமும் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் மாவட்ட மேலாளரால் கூர்ந்து ஆய்வு செய்யப்படும். உரிமத்தொகையை ஒவ்வொரு மாதமும் நிபந்தனையின்படி செலுத்த தவறினால், உரிமம் புதுப்பிக்கப்பட மாட்டாது. மேலும் ஒப்பந்தக்காலத்திற்குள் ஒப்பந்ததாரர் உரிமத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த தவறி அதனால் உரிமம் ரத்து செய்யும் பட்சத்தில், மற்றொரு ஒப்பந்தப்புள்ளி கோரி பின்னர் தேர்வு செய்யும் புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யும் வரை ஏற்படக்கூடிய நஷ்டத்தையும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் செலவினையும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் கணக்கிட்டு வசூலிக்கப்படும்.

47. மேற்படி உரிமத்தை ஒப்பந்ததாரர் வேறு எவருக்கும் மாற்றி தரக்கூடாது. இவ்விற்பனையை டாஸ்மாக் அனுமதி பெறாத வெளிநபர் கண்காணிக்கவும் அனுமதிக்கக்கூடாது.

48. ஒப்பந்ததாரர் நியமிக்கும் பணியாளர்களின் நன்னடத்தைக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாகும். அவரது பணியாளர்கள் சண்டைச் சச்சரவுகளில் ஈடுபடுவதோ டாஸ்மாக் நிறுவனத்தின் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்படும் வகையில் நடந்து கொள்வதோ அனுமதிக்கப்பட மாட்டாது. தவறும் பட்சத்தில் மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் இழப்புத் தொகையினை ஒப்பந்ததாரர் வரைவுக்காசோலை மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். இவ்விஷயத்தில் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் இழப்புத்தொகையே இறுதியானது.

49. எந்தவித சிக்கலும் இல்லாமல் சுமூகமாக ஒப்பந்ததாரர் இறுதி காலம் வரை செயல்பட்டால் மாத்திரமே காப்பீட்டுத்தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

50. மதுக்கூடம் சம்மந்தமாக கலப்பட தடுப்புச்சட்டம், தொழிலாளர் நல சட்டங்கள் மற்றும் இதர சட்டங்கள் ஆகியவற்றிக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார். எந்த வகையிலாவது மேற்கண்ட சட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் டாஸ்மாக் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டால் அதனை முழுவதுமாக ஒப்பந்ததாரர் ஈடுகட்ட வேண்டும்.

51. இந்த நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறினால் காப்பீட்டுத் தொகையிலிருந்து இழப்பீடு தொகை சரி செய்யப்படுவது உடன் ஒப்பந்தத்தையும்/உரிமத்தையும் டாஸ்மாக் நிறுவனம் ரத்து செய்ய உரிமையுண்டு.

**விண்ணப்பதாரர் கையொப்பம்.**

52. இந்த நிபந்தனைகளை ஒப்பந்ததாரர் மீறினால், அதனால் டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பினை மாவட்ட மேலாளர் கணக்கிட்டு கூறுவார். அவரது முடிவு இறுதியானது. அவர் கூறும் தொகையை ஒப்பந்ததாரர் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். தவறினால் அந்தத் தொகையை ஒப்பந்ததாரரின் காப்பீட்டு தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.

53. காலி பாட்டில் சேகரிப்பதிலோ, தின்பண்டங்கள் விற்பதிலோ அல்லது மதுக்கூட செயல்பாடு சம்மந்தமாக ஏற்படும் சட்ட சிக்கல்கள் மற்றும் வழக்குகளையும் ஒப்பந்ததாரரே எதிர்கொள்ள வேண்டுமேஒழிய டாஸ்மாக் நிறுவனத்தை தொடர்புபடுத்த இயலாது.

54. ஒப்பந்ததாரருக்கு டாஸ்மாக் நிறுவனத்திற்கும் இடையில் வழக்கு ஏற்பட்டால் அந்த வழக்கு 1996-ம் ஆண்டின் Arbitration and Conciliation Act-ன் கீழ் தீர்த்துக் கொள்ளலாம்.

55. வேறு வழக்கு ஏதாவது எழுந்தால் சம்மந்தப்பட்ட மாவட்ட எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்தில்தான் வழக்கு தொடரவேண்டும்.

56. ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ளும் நபரோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ அல்லது அவரது உறவினர்களோ முன்னதாக தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்து கொள்ள உரிமம் பெற்று அதில் ஏதேனும் தொகை செலுத்தாமல் இருந்தாலோ அல்லது தவறான செயல்களில் ஈடுபட்டிருந்தாலோ அந்த நபரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

57. மதுக்கூட ஒப்பந்த புள்ளி தேர்வு செய்யப்படும் ஒப்பந்ததாரர் உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு அலுவலரின் (FSSAI) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

58. மதுக்கூடத்தின் மாதாந்திர அனுமதி கட்டணம் நடப்பு மாதத்திலே 5ம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும். தவறும் பட்சத்தில் 12% வட்டி வசூலிக்கப்படும்.

59. இணைப்பில் உள்ள அறிவிப்பை மது அருந்துவோர் கவனத்திற்கு தெரியும்படி (3அடி அகலம் 4அடி உயரம்) அறிவிப்பு பலகையை மதுக்கூடத்திற்குள் வைக்க வேண்டும்.

60. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017/தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம் 2017ன் கீழ் பதிவு செய்து GSTIN வரி செலுத்த சான்று பெற்றவராக இருக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யும்போது GSTIN சான்றிதழ் சமர்பிக்க வேண்டும். மேலும் தாங்கள் பிரதிமாதம் செலுத்தும் 99% கேட்புத்தொகைக்கு 18% GST தனி வங்கி வரைவோலையாக அரசு கணக்கில் செலுத்தி இரசீதின் நகலை சமர்பிக்க வேண்டும்

61. The Tenderer unconditionally agree to abide by the Code of Prevention and Detection of Fraudulent Acts in Tamilnadu State Marketing Corporation Limited - 2014' and agree not to indulge or allow anybody else working in their organization and in TASMAC to indulge in fraudulent activities and would immediately apprise TASMAC of the fraud / suspected fraud as soon as it comes to their notice."

**விண்ணப்பதாரர் கையொப்பம்.**

## குளிர்சாதன வசதி (A/c) க்கான நிபந்தனைகள்

1. மதுக்கூட ஒப்பந்ததாரர் குளிர்சாதன வசதி (AC Bar) கொண்ட மதுக்கூடத்தில் போதுமான ஒளி (Light) வசதி தண்ணீர் வசதி மற்றும் விசாலமான இடவசதியுள்ளதாக மதுக்கூட ஒப்பந்ததாரர் தன் சொந்த செலவில் செய்து கொள்ள வேண்டும்.

2. குளிர்சாதன வசதி (AC Bar) இல் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அவ்வப்போது மதுக்கூடத்தில் சேரும் கழிவுகள் அகற்றி (குளிர்சாதன வசதியை) தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும் என்பது மதுக்கூட ஒப்பந்ததாரர்களின் கடமையாகும்.

3. குளிர்சாதன வசதி உள்ள இடத்தில் குறைந்த பட்சம் 2 முதல் 3 கைகழுவும் சாதனம் (Wash Basin) இருக்க வேண்டும்.

4. மதுக்கூடங்களில் கட்டாயம் சிறுநீர் கழிப்பிடம் (Toilet) மற்றும் கைகழுவும் அறை (Wash Room) வசதி ஏற்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

5. வாடிக்கையாளர்களின் வசதிக்காக குளிர்சாதன வசதி (A/c Bar) இல் விசாலமான இடவசதியுள்ளதாகவும், மேசை நாற்காலிக்கு இடையே போதுமான இடவெளியுள்ளதாக இருத்தல் வேண்டும்.

6. மதுக்கூடத்தில் தனித்தனியே குளிர்சாதன வசதி இருப்பின் குளிர்சாதன வசதியில்லாத தனி அறை அவசியம் ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

7. குளிர்சாதன வசதி இயக்கவில்லை எனில் இடத்தை குளிர்சாதன வசதியற்ற மதுக்கூடமாக உபயோகிக்கலாம். ஆனால் நுகர்வோரிடமிருந்து தனி கட்டணம் விதிக்க இயலாது. மதுக்கூட ஒப்பந்ததாரர் குளிர்சாதன வசதிக்காக முழு மாதாந்திர கட்டணத்தை நிறுவனத்திற்கு தனி வங்கி வரைவோலையாக (D.D.) செலுத்தி தனியாக அனுமதி பெறவேண்டும்.

8. மேற்கண்ட தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரிக்கும் ஒப்பந்த நிபந்தனை முழுவதும் குளிர்சாதன வசதி கொண்ட மதுக்கூடத்திற்கும் பொருந்தும்.

9. குளிர்சாதன வசதி உள்ள (A/c Bar) மதுக்கூடங்களுக்கும் இரண்டு மாத கேட்புத் தொகை ரூ. 20,000/-ஐ காப்புத் தொகையாகவும் ஒருமாத கேட்புத் தொகை ரூ. 10000/-ஐ முன்வைப்புத் தொகையாகவும் தனியாக செலுத்த வேண்டும்.

10. குளிர்சாதன வசதி உள்ள (A/c Bar) மதுக்கூடங்களுக்கு செலுத்தப்படும் இரண்டு மாத காப்புத் தொகையானது ஒரே வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும். அதைத்தவிர ஒரு மாதத்திற்கான தொகையை அரசு கணக்கில் செலுத்திட ஒரு வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) 99% தொன்னூற்று ஒன்பது சதவீதத்திற்கும் மற்றொரு வங்கி வரைவோலை (டிமாண்ட் டிராப்ட்) 1% ஒரு சதவீதத்திற்கும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்திட வேண்டும். ஆக, மொத்தம் புது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்படும் வங்கி வரைவோலை எண்ணிக்கை மூன்று மட்டுமே இருத்தல் வேண்டும். அதை போலவே இரண்டாவது மாதம் முதல், மாதாமாதம் வழங்க வேண்டிய வங்கி வரைவோலை இரண்டு மட்டுமே இருத்தல் வேண்டும்.

**மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் தெரிந்து கொண்டு ஏற்றுக்கொள்கிறேன். மேலும் அவற்றின்படி நடப்பேன் என உறுதி கூறுகிறேன்.**

விண்ணப்பதாரரின் கையொப்பம்

## இணைப்பு

# அறிவிப்பு

## மது அருந்துவோர் கவனத்திற்கு

1. "மது - நாட்டுக்கு, வீட்டுக்கு, உயிருக்கு கேடு."
2. டாஸ்டாக் மதுபானக் கடையில் வாங்கப்படும் மதுபானங்களை மட்டுமே இம்மதுக்கூடத்தில் வைத்து அருந்த அனுமதி உண்டு. இங்கு மதுபானங்கள் விற்பனை கிடையாது.
3. வெளியிலிருந்து கொண்டும் வரும் திண்பண்டங்கள், குளிர்பானங்கள் மற்றும் குடிநீர், ஆகியவற்றை இம்மதுக்கூடத்தில் உண்ண/அருந்த அனுமதி இல்லை.
4. சந்தேகத்திற்கு இடமான பொருள்களை (liquid, powder) மதுக்கூடத்திற்குள் கொண்டு வர அனுமதிக்கப்பட மாட்டாது.
5. அளவிற்கு அதிகமாக மது அருந்தவோ, மிக அதிக நேரம் மதுக்கூடத்தில் இருந்து மது அருந்தவோ, வெளியிலிருந்து கொண்டும் வரும் பொருள்களை மதுவுடன் கலந்து அருந்தவோ அனுமதி இல்லை.
6. சந்தேகப்படும்படியானவர்களை முழுமையாக சோதனை செய்ய மதுக்கூடப் பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
7. மது அருந்துவோர் ஏதாவது விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு காரணமாக இருந்தால் மதுக்கூடத்தை விட்டு உடனடியாக வெளியேற்றப்பட்டு, காவல்துறையிடம் உரிய புகார் அளிக்கப்படும்.
8. இம்மதுக்கூடத்தில் அடுப்பு வைத்து சமைத்து தின்பண்டங்கள் விற்கப்படமாட்டாது. வெளியில் சமைத்த தின்பண்டங்கள் மட்டுமே விற்கப்படும்.
9. வழங்கப்படும் தின்பண்டங்களின் தரம் மற்றும் விலை பற்றியோ மற்றும் வேறு ஏதாவது புகார் இருந்தாலோ கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்கு தகவல் தெரிவிக்கவும்.

டாஸ்மாக் நிறுவனத்தின் கட்டணம் இல்லாத தொலைபேசி எண். **1800 425 2015**

ஒப்பம்/-
மாவட்ட மேலாளர்

மதுக்கூட ஒப்பந்ததார்,
கடை எண்.....................